# இஸ்லாமியக் கலாச்சாரத்தின் பிரிவுகள்

## கலாச்சாரம் / நாகரீகத்தின் விளக்கம்

நாகரீகம் என்பது மனிதர்களுடைய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அவர்களுடைய சுகம் மற்றும் சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் குறிக்கும் சொல்லாகும். தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், நகரமயமாக்கம் மற்றும் கலாச்சாரத்தில் முன்னேற்றத்தின் பெயர்தான் நாகரீகமாகும்.

கலாச்சாரம் என்பது கொள்கைகளில் முன்னேற்றத்தைக் குறிக்கும், உதாரணமாக, சட்டங்கள். அரசியல், வாழ்க்கைமுறை, நற்பண்புகள், குணங்கள் ஆகியன. இவற்றின் மூலம் ஒரு மனிதன் சீரான சிந்தனைகளையுடையவனாக மாறிவிடுகிறான்.

நகரமயமாக்கம் என்பது நாகரீகத்தின் ஒரு அம்சம் என்ற வகையில், மனிதர்களுடையஅனுபவ ரீதியான கல்வி மற்றும்அறிவியல் துறையில் முன்னேற்றத்தைக் குறிக்கும். உதாரணமாக, மருத்துவம், பொறியியல் மற்றும் விவசாயம் ஆகியன. இதனை நகரமயமாக்கம் எனக்கூறப்படுவது, இது நகரங்களுடன் நேரடித்தொடர்புடையதாக இருப்பதன் காரணமாகவே. மனிதன் நகரங்களில் பெறப்படும் ஆதாரங்களைத் தனதாக்கிக்கொண்டு அவற்றின் மூலமாகவே அவனும் வளர்ச்சியடைகிறான். உதாரணமாக, சொத்துக்கள், வேலை வாய்ப்புக்கள் ஆகியன. இவ்வகையில், நகரமயமாக்கம் ஒரு மனிதனை அவனைச் சுற்றியுள்ளவற்றின்மீது அவனுடைய அதிக்கத்தையும் உரிமைகளையும் பெற்றுத்தருவதோடு அவனுடைய சுற்றுச்சூழல் மற்றும் அனைத்து நிலைகளையும் அவனுக்குச் சாதகமானவையாக மாற்றிவிடுகின்றது.

ஒரு மனிதனுக்கு நகரமயமாக்கம் மற்றும் கலாச்சாரம் மிகவும் தேவையானவையாகவே உள்ளன. இது, மனிதர்களுடைய சிந்தனைகளும்அவர்களுடைய ஈடுபாடுகளும் சீரானவவையாக இருப்பதற்கும், அவர்களுடைய வாழ்க்கையும் சிறந்து விளங்குவதற்கும் இன்றியமையாததாகும். எந்த ஒரு நாடு மனிதர்களுடைய கண்ணியம் மற்றும் நற்பண்புகளைப் புறக்கணித்து பொருள்ரீதியானமுன்னேற்றத்தையே அடிப்படையாகக்கொண்டுள்ளதோ அது ஒரு நகரமயமாக்க நாடாக இருக்குமே தவிர, நாகரீக வளர்ச்சியடைந்த நாடாக இருக்கமுடியாது. இவ்வகையில், மேலைநாடுகள் அனைத்துமே முன்னேறிய நாடுகளாக உள்ளன, நாகரீக வளர்ச்சியடைந்த நாடுகளாக அல்ல. மேலை நாடுகள் ஒழுக்கம் மற்றும் பண்புகளைப் புறக்கணித்துவிட்டு பொருள் ரீதியான வளர்ச்சியையே குறிக்கோளாகக்கொண்டு

செயல்படுகின்றன. ஆனால், இஸ்லாம் மனிதனுக்கு அவனுக்குரிய கண்ணி யத்தை வழங்கியுள்ளதோடு அவனுடைய அந்தஸ்தினையும் உயர்த்தியுள் ளது. மனித சமுதாயம் நற்பண்புகளையே ஆதாரமாகக்கொண்டு நிலைத் திருப்பதற்குத் தேவையான ஒரு உயர்வான நாகரீக, கலாச்சாரத்தினையே வழங்கியுள்ளது.

## இஸ்லாமியக் கலாச்சாரம் / நாகரீகத்தின் விளக்கம்

இஸ்லாமியக் கலாச்சாரம் என்பது இஸ்லாமிய மார்க்கம் மனிதர்களு டைய வாழ்க்கைக்கான வழிமுறையாக வகுத்துத்தந்துள்ள அடிப்படைகள் மற்றும் சட்டதிட்டங்களும் ஒழுக்கப்பண்புகளுமாகும். இந்த அடிப்படை கள் மற்றும் சட்டதிட்டங்களும் ஒழுக்கப்பண்புகளும் ஒரு மனிதனுடைய கண்ணியம் மற்றும் அந்தஸ்தினை உயர்த்தி அவனுடைய உலக ரீதியான வளர்ச்சியிலும் அவனுக்கு உதவுவதோடு அதனை எளிதாக்கியும் விடுகின் றது.

## இஸ்லாமியக் கலாச்சாரம் / நாகரீகத்தின் முக்கியத்துவம்

இஸ்லாமியக் கலாச்சாரத்தில் தனிநபரான ஒருவர் சமுதாயத்தின் வளர்ச்சிக் கான முதல் படியாகும். இந்த முதல் கட்டமான ஒரு தனிமனிதன் சீர் பெற்று விடுவானேயானால் அவனுடைய சமுதாயமும் சீர்த்திருத்தத்தைப் பெறும் மற்றும் இந்த சமுதாயம் அதன் கலாச்சார மரபுகளைப் பாதுகாத்து அதனை மேம்படுத்தும் பொறுப்பினை ஏற்று அதனை நிறைவேற்றுவதற் கான தகுதியினைப் பெற்றுவிடுகின்றது. ஆகவேதான், இஸ்லாம் ஒரு தனிமனிதனுடைய வாழ்க்கையை சீரானதாக்கி அவனுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிம்மதியும் அளிக்கக்கூடிய போதனைகளையும் சட்டதிட்டங் களையும் வகுத்துத்தந்துள்ளது. இஸ்லாம் ஒரு தனிமனிதனுடைய ஆன்மா, அறிவாற்றல், உடலுறுப்புக்கள் அனைத்தையும் சீரான அமைப்பினை அளிக்கவல்ல போதனைகளை வழங்கியுள்ளது.

ஒரு தனிமனிதனுடைய வாழ்க்கையை சீரானதாக்கியபின்பு, இஸ்லாம் தனி நபர்கள் ஒன்றுசேர்ந்து வடிவமைக்கும் அவர்களுடைய சமுதாயத்தின்புற மாகக் கவனத்தைச் செலுத்தும் வகையில், அவர்களிடையே பரஸ்பர உறவு கள், ஒத்துழைப்பு, நன்மையானவை மற்றும் இறையச்சத்தின்பால் ஊக்கு விக்கின்றது. இதற்கான காரணம், மனிதர்கள் இந்த பூமியின்மீது குடியி ருந்து அதனைச் செழிப்பாக்குவதோடு மனிதர்களின் நலன் மற்றும் அவர் களுடைய வாழ்வாதாரத்திற்குத் தேவையானமற்றும் அவர்களுக்கு மகிழ்ச்சி யளிக்கும் மறைவான பொக்கிஷங்களைக் கண்டெடுத்து பயனடையவேண் டும் என்பதற்காகவே. நம்முடைய முன்னோர்கள் தங்களுடைய பொறுப்

பினை சீரான முறையில் நிறைவேற்றியிருக்கின்றனர். அவர்கள் இந்தக் கலாச்சார மரபுகளைத்தாங்கிச்சுமந்தவர்களாக அதனை நம்மிடம் கொண்டு சேர்க்கும்வகையில் உலக மக்கள் அனைவருக்கும் இதற்கான அறிவு மற்றும் நற்போதனைகளைப் பரிமாறி அறிவுறுத்தியுள்ளனர்.

## இஸ்லாமியக் கலாச்சாரத்தின் விதங்கள

இஸ்லாமியக் கலாச்சாரம் மூன்று வகையானது:

1 **வரலாற்றுக் கலாச்சாரம் (பல்வேறு நாடுகளின் நாகரீகங்கள்)** ஒவ்வொரு இஸ்லாமிய நாடும் மனிதர்களுடைய கண்ணியம் மற்றும் அந்தஸ்தினை உயர்த்துவதற்கான ஆதாரமாகவும் அவர்களுக்குச் சேவை புரியும் வகையிலும் அறிமுகப்படுத்திய கலாச்சாரம் இதுவே. இந்த நாடுகளின் கலாச்சார நாகரீக மரபுகளைப்பற்றிக் கூறும்போது, இந்தக் கலாச்சாரம் மற்றும் அதன் அம்சங்களை, உதாரணமாக, விவசாயம், தொழில் துறை, கல்வி, பன்னாட்டு உறவுகள் மற்றும் பல்வேறு துறைகளில் எண்ணற்ற சிறப்புமிக்க சாதனைகளைப் புரிந்து அவற்றை விரிவடையச் செய்து, மேலோங்கி உச்சக்கட்டத்தையடையச்செய்த அந்த நாடுகளின் வரலாற்றையும் இங்கே குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

2 **அடிப்படையான உணமையான இஸ்லாமிய கலாச்சாரம்** மனித இனத்தாரின் பூரணமான நலனைக் கருதி இஸ்லாம் வகுத்துத்தந்துள்ள கலாச்சாரம் இதுவே. இது மனித வாழ்க்கையின் அனைத்துத் துறைகள், உதாரணமாக, கொள்கைகள், அரசியல், பொருளாதாரம், நீதி, வழிகாட்டுதல்கள் மற்றும் சமுதாயச் சீர்த்திருத்தங்கள் ஆகிய அனைத்து அம்சங்களிலும் அளித்துள்ள போதனைகளை ஆதாரமாகக் கொண்டதாகும். மனிதர்களுடைய உறுதிப்பாடு மற்றும் அவர்களுடைய பாக்கியங்கள் அனைத்துமே இவை சீரான முறையில் கடைபிடிக்கப்படுவதன் அடிப்படையில்தான் அமைந்திருக்கின்றன.

3 **புனரமைக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட கலாச்சாரம்** இதனை புனரமைக்கப்பட்டு உயிரூட்டப்பட்ட கலாச்சாரம் என்று கூறப்படுகின்றது. முஸ்லிம்கள் அழிவுக்கு ஆளாக்கப்பட்டுவிட்ட இந்த நாகரீகங்களை மீண்டும் உயிரூட்டி, ஆதரித்து அவற்றை மேலும் வளர்ச்சியடையச் செய்து மனிதர்களிடையே மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளனர். பெருமளவிலான நாகரீகங்கள் மற்றும் கலைகள் அழிந்துவிடும் நிலையில் இருந்தன. முஸ்லிம்கள் அவற்றில் புத்துணர்வூட்டி, இஸ்லாத்தின் மூலம் அவர்கள் கற்றறிந்த சீரான இஸ்லாமியப் பண்புகளையும் இணைத்து மீண்டும் மக்களிடையே நடைமுறைப்பத்தியுள்ளனர். இதன் காரணமாகவே, மேலை நாட்டினர் இஸ்லாமியக் கலாச்சாரம்

www.uzairfalahi.com

கிரேக்க மற்றும் ரோம நாகரீகங்களை அடிப்படையாகக்கொண்டது என்று கூறுகின்றனர். உண்மையில், அரேபியர்கள் இந்த நாகதகரீகங் களின் தோற்றத்தையே மாற்றியமைத்து அவற்றை புதிய வடிவத்தில் வார்த்தெடுத்துள்ள காரணத்தினால்தான் இது ஒரு தனித்தன்மை வாய்ந்த நாகரீகமாக வடிவெடுத்துள்ளது.

ஆனால், இவ்வாறு கூறுவது தவறானதாகும், இதில் எந்த உண்மை யுமில்லை. அத்துடன் இதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஏனெனில், இஸ்லாமியக் காலாச்சாரம் சிறப்புமிக்க தனிப்பெரும் கலாச்சாரமா கும் மற்றும் இது மற்ற கலாச்சாரங்களிலிருந்து பெரிதும் வேறுபட்ட தாகும். இதன் அடிப்படை அம்சமும் குறிக்கோளும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக அல்லாஹ்வினால் கடமையாக்கப்பட்ட கட் டளைகளை அல்லாஹ்வின் அடியார்களிடையே நடைமுறைப்படுத் துவதாகும். இதன் குறிக்கோன் பொருள் ரீதியான முன்னேற்றமல்ல. அவ்வாறு இதன் குறிக்கோளாக மற்றக் கலாச்சாரங்களைப்போன்று பொருள் ரீதியான முன்னேற்றம் மட்டுமே இருந்திருக்குமேயானால், அதனால் தனி மனிதர்கள் மற்றும் மனித இனத்தவர் அனைவருக்கும் எவ்வித நன்மையும் இருந்திருக்காது.

மற்ற காலாச்சாரங்களின் பல்வேறு அம்சங்களைக்கொண்டு பயன டைந்துள்ளது என்று கூறுவது இதன் சிறப்பினையே பிரதிபலிக் கின்றதேதவிர, அது ஒரு குறைபாடு அல்ல. இதன் பொருள் என்ன வெனில், இஸ்லாமிய கலாச்சாரம் முஸ்லிம்களுடைய அறிவாற்றல் களை மேம்படுத்துவதற்கான, மூடப்பட்டுள்ள வாயில்களைத் திறந்து விடுவதோடு மற்ற கலாச்சாரங்களிடையே பெறப்படும் பல்வேறு அம்சங்களைஏற்றுக்கொள்ளும் பண்புகளையும்தயார்ப்படுத்துகின்றது, ஆனால், ஒரு நிபந்தனையுடன், அதாவது, அவை இஸ்லாமிய அடிப் படைகளுக்கு ஏற்புடையவவையாக இருக்கவேண்டும், எதிர்மறை யானவையாக இருக்கக்கூடாது என்பதாகும். முற்காலத்திலிருந்த கலாச்சாரங்களைக்கொண்டு பயனடைவதன்மூலம் இஸ்லாமியக் கலாச்சாரத்தின் முக்கியத்துவம் குறைந்துவிடுவதில்லை, மாறாக, ஒன்று முடிவுக்கு வரும் நிலையில் அதனைக்கொண்டு புதிதான ஒன்று துவங்கப்படவேண்டும் என்பது வளர்ச்சிக்னான ஒரு இன்றியமையாத அடிப்படையாகும். இவ்வகையில், ஒரு புதிய கலாச்சாரம் உரு வெடுக்கும் நிலையில், கடந்த காலத்தில் முற்றுப்பெறாத விஷயங் களைப் முழுமைப்படுத்தும் வகையில், புதுப்புது விஷயங்களைக் கூடுதலாக அறிமுகப்படுத்துவது இயல்பான ஒன்றே.

* * *



www.uzairfalahi.com